**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.332/2022**

**பி.வா.சா. – 1 – வெங்கடேசன்**

**நாள். 24.07.2025**

**<u>பி.வா.சா.1 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் B.sc. படித்துவிட்டு டீச்சர் Training படித்திருக்கிறேன். நான் கொட்டநத்தம் அரசு தொடக்கப்பள்ளி வேலை செய்து வருகிறேன். வங்கி பரிவர்த்தனை பற்றி எனக்கு தெரியும். காசோலையை ஒரு நபருக்கு கொடுத்ததால், அந்த காசோலை தொகையை கொடுக்க வேண்டும் என்பது எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் வாசா.ஆ.1 காசோலையில் உள்ள கையொப்பம் என்னுடையது தான், அது நான் கொடுத்த காசோலை என்றால் சரிதான். அதில் ரூ.10,00,000/–க்கு தொகை எழுதியுள்ளது என்றால் அந்த தொகையை நான் எழுதவில்லை. எனது மனைவி பெயரில் நான் வீடு வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வீடானது வாதி கோவிந்தராஜனிடமிருந்து வாங்கிய வீடாகும். வா.சா.ஆ.2 உள்ள ஆவணத்தில் கோவிந்தராஜன் என்ற பெயர் கிடையாது என்றால் சரிதான். அவரின் மனைவியிடமிருந்து தான் வாங்கினேன். மேற்படி 10 இலட்சம் கோவிந்தராஜனுக்கு திருப்பி செலுத்தியதற்கு எங்களிடம் ஆவணங்கள் ஏதேனும் உண்டா என்றால் நான் 10 லட்சம் கோவிந்தராஜனிடம் வாங்கவே இல்லை. கோவிந்தராஜன் வழக்கறிஞர் மூலம் நோட்டீஸ் அனுப்பினாரா என்றால் ஒரு முறை வந்தது. தேதி ஞாபகமில்லை. மேற்படி நோட்டீஸ்க்கு நான் பதில் கொடுத்திருக்கிறேன். அந்த பதிலை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பதிலை தாக்கல் செய்ததாக எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதற்காக கோவிந்தராஜனிடம் காசோலையை எதற்காக கொடுத்தேன் என்றால் கோவிந்தராஜனின் மனைவியிடம் வாங்கிய வீட்டிற்கு ரொக்கம் 3 லட்சம் கொடுத்துவிட்டு, மீதி தொகை கொடுப்பதற்காக 2 காசோலையும் மற்றும் ஒரு புரோநோட்டு கொடுத்துள்ளேன். மேற்படி உடன்படிக்கையில் கோவிந்தராஜின் பெயரை எங்காகவது குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளதா என்றால் கோவிந்தராஜ பெயர்

எழுதப்படவில்லை, கோவிந்தராஜ் மனைவி பெயர் எழுதியுள்ளேன். கோவிந்தராஜக்கும் கோவிந்த ராஜின் மனைவி வீட்டை நான் கிரையம் வாங்கியதற்கும், எந்த தொடர்பும் இல்லை என்றும், கோவிந்தராஜன் கொடுத்த காசோலை தொகை மோசடி செய்தவதற்காக கோவிந்ராஜன் மனைவி பெயரை பயன்படுத்துகிறேன் என்றால் தவறு. பி.வா.சா.ஆ.3 வங்கி கணக்கு பட்டியலில் கோவிந்தராஜனுக்கு பணம் போனதாக பதிவுகள் எதுவும் உள்ளதா என்றால் கோவிந்தராஜன் வங்கி கணக்கு இல்லை. எனவே, பதிவு எதுவும் இல்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 காசோலை கோவிந்ராஜனின் வங்கி கணக்கில் தான் செலுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால் கோவிந்தராஜன் வங்கி கணக்கு வைக்கவில்லை என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. கோவிந்தராஜன் வங்கி கணக்கிற்கு பணம் போனதாக பதிவுகள் எதுவும் உள்ளதா என்றால் நான் ஆவணங்களை பார்த்துவிட்டு தான் சொல்லமுடியும்.

**ஆவணங்களை பார்த்துவிட்டு சாட்சியம் வழங்குவதற்காக வழக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN

Digitally signed by P VELMURUGAN
Date: 2025.07.24 18:37:04 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.